**இலங்கை பட்மின்டன் சங்கம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் ("சங்கம்") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அர சியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சங்கத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) 2022 திசெம்பர் 31 இல் ரூபா 93,200 பெறுமதியான முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட கணனிகள் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படவில்லை மற்றும் 10.15 மற்றும் 10.18 இற்கு இணங்க பயனுள்ள ஆயுட்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கணக்கீடு செய்யப்படவில்லை. | பயன்பாட்டில் இருந்தாலும் இவை பழைய மற்றும் காலாவதியான பொருட்கள் என்பதால் சந்தை மதிப்பு இல்லை. எனவே, சொத்துக்களை மறுமதிப்பீடு செய்வதற்கான தேவையை அது பூர்த்தி செய்திருக்கவில்லை. | சங்கத்தால் பயன்படுத்தப்பட்டு வரும் சொத்துகளின் பயனுள்ள ஆயுட்காலத்தை மறுமதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுகளின் 08 வகைச் செலவினங்களுக்காகச் செய்யப்பட்ட ரூபா 490,751 ஆன செலவானது, முன்னைய ஆண்டின் சீரராக்கமாக சீரராக்கமாககப்படாமல் மீளாய்வாண்டின் செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | செலவினங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) தேய்மானக் கணக்கீட்டில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக தேய்மானத்தின் அளவு ரூபா 29,981 ஆல் குறைவாகவும் திரண்ட தேய்மானம் ரூபா 135,198 ஆல் அதிகமாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | தேய்மானம் சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) சங்கத்தின் செயற்பாட்டிற்காக வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட மைட்லேண்ட் பிளேஸில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் உள்ளக விளையாட்டரங்கம் ஆகியவை நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.. | இலங்கை பட்மின்டன் தலைமை அலுவலக வசதி இலங்கை பட்மின்டனுக்குச் சொந்தமானது அல்ல. எனவே இது நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவிலலை. | இந்த மதிப்பீட்டை நிதிக்கூற்றுக்களில் மதிப்பிட்டு வெளிப்படுததுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் கட்டிட பழுதுபார்ப்புக்காக சங்கத்தினால் ரூபா 150,800 அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் கட்டிடப் பழுதுபார்ப்புச் செலவுகள் ரூபா 150,800 ஆல் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் பெற வேண்டிய தொகை அதே அளவினால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2023 செப்டம்பர் 13 இல் இது சரிசெய்யப்பட்டு, அதிகமாக செலுத்தப்பட்ட பணம் அறவிடப்பட்டது. | இந்த வகையான கொடுப்பனவுகளைத் தவிர்ப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | 2023 இல் நடைபெறுமென எதிர்பார்க்கப்பட்ட போட்டியிலிருந்து பெறப்பட்ட ரூபா 501,500 ஆனது மீளாய்வாண்டின் உள்ளுர் போட்டி வருமானமாக காட்டப்பட்டிருந்தது. எனவே, ஆண்டிற்கான பற்றாக்குறை அந்தத் தொகையால் குறைவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | போட்டிக் காலத்தின்போது பெறப்பட்ட பணம் மற்றும் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டது. | வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்த விளையாட்டு அமைச்சிடமிருந்து பெற வேண்டிய 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,687,335 ஆன தொகை அறவிடப்படவில்லை. மேலும், வரிசை அமைச்சிடமிருந்து நீண்ட காலத்திற்கு முன்பு பெறப்பட்ட ரூபா 250,000 ஆன மானியம் உரிய முறையில் விடுவிக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் உரிமையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இது விளையாட்டு அமைச்சிடமிருந்து பெற வேண்டியவைக்கு எதிராக ஈடு செய்யப்பட முடியாது. | பெற வேண்டிய தொகை விரைவில் அறவிடப்படுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தின் நான்கு வீரர்கள் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியதற்காக சர்வதேச சங்கமொன்றின் மூலம் செலுத்தப்பட வேண்டிய பணத்திலிருந்து சங்கத்தின் முன்னாள் தலைவருக்கு திருப்பிச் | மீட்புக்காலம் முடிவடைந்து விட்டதால், முன்னைய நிர்வாகம் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தவறிவிட்டது | செலுத்தப்பட வேண்டிய தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,200,000 ஆன தொகை 2019 ஆம் ஆண்டு முதல் செலுத்தப்படவில்லை. | | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,927,040 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 375,266 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,551,774 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. பயிற்சி மற்றும் குழுச் செலவுகள் ரூபா 22,393,823 ஆல் அதிகரித்தமை இப்பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 49,999 ஆன சில்லறை காசு மீதி அடையாளம் காணப்படாமல் மற்றும் விடுவிக்கப்படாமல் 05 ஆண்டுகளுக்கும் மேலாக பணம் மற்றும் பணத்திற்குச் சமமான தொகையில் காணப்பட்டது. | அனைத்து முற்பணங்களும் நிதி அமைப்பில் கணக்கிடப்பட்டு மாதாந்த மீளாய்விற்கு உட்படுத்தப்படுகின்றது. | நிலுவைகள் அடையாளம் காணப்பட்டு விடுவிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பு மற்றும் நல்லாளுகை.**

**4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க கட்டளைகள் III ஆம் பிரிவு 7 xii பந்தியின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நாங்கள் ஏற்கனவே 2023 ஆகஸ்ட் 08 அன்று மூலோபாயத் திட்டத்தை மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளோம் | நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு முன்னர் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |